

திருப்பூர் கிழக்கு மாவட்டம், ஊதியூரில் குண்டடம் கிழக்கு ஒன்றியக் கழக அலுவலகத்தை மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், குண்டடம் கிழக்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் எஸ்.சிவபிரகாஷ் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர்

# ராஜ வாய்க்காலில் தண்ணீர் திறக்கக் கோரி காத்திருப்பு போராட்டம்!

## இளம் விவசாயிகள் சங்கத்தினர் த.வெ.க. அரசுக்கு எதிராக சாலையில் அமர்ந்து முழக்கமிட்டனர்!

நாமக்கல், ஜுலை. 2-

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருகே உள்ள ஜேடர்பாளையம் படுகை அணையில் இருந்து ஆண்டுதோறும் 350 நாட்களுக்கு விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக ராஜ வாய்க்கால் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

இதில் ராஜ வாய்க்காலில் ஆண்டு தோறும் மார்ச் 1 ஆம் தேதி முதல் 15 நாட்களுக்கு தண்ணீர் நிறுத்தப்படுவது வழக்கம்.

பரமத்திவேலூர் சுற்று வட்டார பகுதியான ஜேடர்பாளையம், நஞ்சை இடையாறு பாண்டமங்கலம், மோகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் வெத்தலை கரும்பு வாழை கோரை உள்ளிட்டவற்றை பயிரிட்டு வருகின்றனர்.

ஆண்டு முழுவதும் விவசாயம் மற்றும் குடிநீருக்காக தண்ணீர் வழங்கப்பட்டு வந்த நிலையில், கடந்த ஜுன் 17ஆம் தேதி எந்தவித முன்னறிவிப்பும் இன்றி தண்ணீர் நிறுத்தி உள்ளனர் இதனால் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள ரூ.100 கோடி மதிப்பிலான வெற்றிலை உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து நாசமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், 20 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, ராஜ வாய்க்காலில் உடனடியாக தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி, இளம் விவசாயிகள் சங்கத் தலைவர் சௌந்தர ராஜன் தலைமையில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கடந்த திங்கட்கிழமை பரமத்திவேலூர் தாலுகா அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து உடனடியாக தண்ணீர் திறந்து விடாவிட்டால் பெரிய அளவில் அரை நிர்வாண சாலை மறியல் போராட்டம் நடத்துவோம் என அறிவித்து நேற்று முன்தினம் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த நீர்வளத்துறை அதிகாரிகள், பரமத்திவேலூர் தாசில்தார் ராஜா, பரமத்தி வேலூர் துணை போலீஸ் சூப்பிரண்டு செந்தில்குமார் (பொறுப்பு) மற்றும் இன்ஸ்பெக்டர் உமாசங்கர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, நாளை ஜுலை 3ஆம் தேதி முதல் ராஜ வாய்க்காலில் மீண்டும் தண்ணீர் திறக்கப்படும் என்று அதிகாரிகள் உறுதியளித்தனர்.

சுமார் மூன்று மணி நேரம் நீடித்த போராட்டத்தால் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற வெற்றிலை ஏலச் சந்தை மற்றும் ஏற்றுமதி பணிகள் பாதிக்கப்பட்டன. பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

இது குறித்து, இளம் விவசாயிகள் சங்கத் தலைவர் சௌந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“ராஜ வாய்க்கால் தண்ணீரை நம்பி வெற்றிலை, வாழை, கோரை உள்ளிட்ட பயிர்களை அதிக முதலீட்டில் சாகுபடி செய்து வருகிறோம். குறிப்பாக வெற்றிலை சாகுபடி ஒரு குழந்தையை வளர்ப்பது போன்றது. தண்ணீர் இல்லாமல் இந்தப் பயிர்களை காப்பாற்ற முடியாது. எந்தவித முன் அறிவிப்பும் இன்றி தண்ணீர் நிறுத்தப்பட்டதால் வெற்றிலை உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

வரும் 3ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்குள் பயிர்கள் முற்றிலும் காய்ந்து கருகி விடும். எனவே, தமிழக முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு, ஏற்கெனவே நடைமுறையில் இருந்தபடி ராஜ வாய்க்காலில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

மேலும், ராஜ வாய்க்காலுக்கு நிரந்தரமாக தண்ணீர் வழங்க மறுக்கும் நீர்வளத்துறை அதிகாரிகளை கண்டித்தும், உடனடியாக ராஜ வாய்க்காலில் தண்ணீர் திறக்க வலியுறுத்தியும், (செவ்வாய்க்கிழமை) காலை பரமத்தி வேலூர் காவிரி பாலம் அருகே உள்ள பைபாஸ் சாலையில் விவசாயிகளை திரட்டி அரைநிர்வாண சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் சௌந்தரராஜன் தெரிவித்தார்.

### சிவகங்கை — இளைஞரணி

# கிங் கார்த்தி தாயார் திருமதி கே.கண்ணாத்தாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, ஜுலை 2 -

சிவகங்கை மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணைஅமைப்பாளர் கிங் கார்த்தியின் தாயார் கே. கண்ணாத்தாள். காஞ்சிரங்கால் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்.

இவர் தனது சொந்த ஊரான அரசனேரி கீழ மேட்டில் மறைவெய்தினார்.


அவரது உடலுக்கு தி.மு.க.வினர் மற்றும் பல்வேறு கட்சிபிரமுகர்கள் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து இறுதிச் சடங்குகள் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் கோவிந்தன்

### ஜுலை 2 (1991)



1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.

1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு “அண்ணா விருது” வழங்கி சிறப்பித்தார்.

“கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் சிவகுமாரை நேரில் சந்தித்து புதிய பேருந்து வசதி மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து சேவை மீண்டும் இயக்குவது குறித்து கோரிக்கை மனுவை கொடுத்தார். உடன் நெல்லை மண்டல தொ.மு.ச. பொதுச் செயலாளர் தர்மன்,மண்டல தொ.மு.ச.தலைவர் முருகன்,முன்னாள் சிக்கன நாணய சங்கத் தலைவர் விஷ்ணு,தென்காசி தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார்,சாய் ராஜன் ஆகியோர் உள்ளனர்.

### தி.மு.க. கூட்டணியில் இருந்தபோது கொள்கை உறுதியோடு இருந்தவர்கள்!

# த.வெ.க.வில் இணைந்த கட்சிகள் கொள்கையோடு இருக்குமா?

## பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



நெல்லை, ஜுலை 2-

த.வெ.க.வில் இணையும் கட்சிகள் தி.மு.க. கூட்டணியில் இருந்தது போல் கொள்கை உறுதியோடு இருப்பார்களா? என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டில் த.வெ.க.ஆட்சி தொடர்வதற்கு துணை நிற்கின்ற அரசியல் கட்சிகள் த.வெ.க. தலைமையில் புதிய கூட்டணி அமைப்பது குறித்து இன்று (01.07.2026 )கூடி ஆலோசிக்க உள்ளனர்.

தற்போது தமிழ்நாட்டின் முக்கிய பிரச்சினைகளான சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை ஒழிப்பதற்கு ஒன்றிய அரசு கொண்டு வரும் CIRA மசோதா, முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத இட ஒதுக்கீடு நீதிமன்றம் மூலம் பறிப்பு,CBSE பள்ளிகள் மூலம் இந்தி,சமஸ்கிருதம் மொழிகள் திணிப்பு, பாராளுமன்ற தொகுதி மறு வரையறை மசோதா,தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் பணி நிரந்தரம், திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றும் விவகாரம்,மேகதாது விவகாரம் மற்றும் அ.தி.மு.க.சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைவது குறித்த விவகாரங்களில் த.வெ.க.நிலையை தெளிவுபடுத்த இவர்கள் வற்புறுத்துவார்களா?

கூட்டணியை உறுதிப்படுத்தும் முன் இவை அடங்கிய குறைந்தபட்ச செயல் திட்டத்தை உருவாக்குவார்களா? அல்லது த.வெ.க.ஆட்சியும்,கட்சியும் எதைச் செய்தாலும் தலையாட்டுவோம் என்று முடிவெடுப்பார்களா?தி.மு.க. கூட்டணியில் இருந்தது போல் கொள்கை உறுதியோடு இருப்பார்களா? அல்லது கொள்கைகளை காற்றில் பறக்க விடுவார்களா?தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் பா.ஜ.க.வின் நிழல் ஆட்சி தான் என்பதை இந்த கூட்டணி கட்சிகள் உணர்வார்களா?

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளார்.

### திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளரிடம்

# மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. கோரிக்கை மனு!

## புதிய பேருந்துகள் இயக்க வலியுறுத்தல்!

தென்காசி, ஜுலை 2-

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் நேற்று முன்தினம் (30.06.2026) திருநெல்வேலி அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் சிவகுமார் நேரில் சந்தித்து தொகுதி மக்களின் கோரிக்கைகள் தொடர்பான புதிய பேருந்து வசதி, நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்த மனுவை கொடுத்தார்.

அந்த கோரிக்கை மனுவில் அவர் கூறி யிருப்பதாவது.

முத்தம்மாள்புரம்,மாவிலித்து, அழகப்பபுரம்,வேதபுதூர்,அய்யாபுரம், மின்நகர், அங்கராயன்குளம், ஆழ்வார்குறிச்சி,அரியப்பபுரம்,இரட்டை குளம்,துரைச்சாமிபுரம்,பூப்பாண்டிபுரம், சுப்பையாபுரம்,கருவந்தா, உச்சிபொத்தை ஆகிய ஊர்களில் இருந்து சுரண்டை, தென்காசி, சங்கரன்கோவில், திருநெல்வேலி, ஆகிய ஊர்களுக்கு பள்ளி கல்லூரிகளுக்கு மாணவ, மாணவிகள், பொதுமக்கள் சென்று வர ஏதுவாக புதிய பேருந்து வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும்.

மேலும் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் அதே வழிதடங்களில் இயக்க நடவடிக்கை எடுக்கக் கோரியும் வலியுறுத்தியுள்ளார்.

மனுவை பெற்றுக் கொண்ட பொது மேலாளர் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை விரைவாக எடுப்பதாக உறுதி அளித்தார்.

அப்போது மாநில தொ.மு.ச.பேரவை துணைத் தலைவரும் திருநெல்வேலி மண்டல தொ.மு.ச.பொதுச் செயலாளருமான தர்மன்,மண்டல தொ.மு.ச.தலைவர் முருகன், முன்னாள் சிக்கன நாணய சங்கத் தலைவர் மகா விஷ்ணு, தென்காசி தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மா.முத்துக்குமார்,சாய் ராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நடவடிக்கைக்கு கண்டனம்!

## சென்னை பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை!

சென்னை, ஜுலை 2-

பத்திரிகையாளரை கீழ்த்தரமாகவும் அச்சுறுத்தும் வகையிலும் பேசிய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நடவடிக்கையை சென்னை பத்திரிகையாளர் சங்கம்(MUJ) வன்மையாக கண்டிக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அருகே, நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களை சந்தித்தார். அந்த சந்திப்பின்போது சமீபத்தில் திமுக கூட்டணியிலிருந்து மதிமுக வெளியேறியது தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஒருகட்டத்தில் கேள்வி எழுப்பிய ஒரு பத்திரிகையாளரிடம் வைகோ அவர்கள் நேரடியாக வாதம் செய்ய ஆரம்பித்தார். அப்போது, “யார் நீ? எந்த பத்திரிகை என்று மரியாதை குறைவாக பேசியுள்ளார். “நீங்க மஞ்சள் பத்திரிகையா? திட்டமிட்டு வந்திருக்கீங்க, யார் உங்கள ஏவிவிட்டது?” என்று பத்திரிகையாளரை மிரட்டும் வகையில் பேசியுள்ளார்.

மேலும், “நீங்க திட்டமிட்டு குழப்பம் செய்வதற்காக இங்கே வந்திருக்கீங்க” என்று வைகோ கூறியதும் அங்கு கூடியிருந்த மதிமுகவினர் கேள்வி எழுப்பிய பத்திரிகையாளரை கோபமாக பேசிக்கொண்டே அவரை நோக்கி முன்னேறியுள்ளனர்.

இப்படிப்பட்ட சூழலில், தொண்டர்களை தடுத்து நிறுத்தாமல் அவர்களை மேலும் தூண்டிவிடும் வகையில் பத்தரிகையாளரை சுட்டிக்காட்டி “வெளிய அனுப்பு, வெளியே அனுப்பு” என்று வைகோ தொண்டர்களிடம் கூறியுள்ளார்.

இதைத்தொடர்ந்து தொண்டர்கள் பத்திரிகையாளரை நோக்கி மேலும் முன்னேறி வரவே, அங்கு கூடியிருந்த சக பத்திரிகையாளர்கள் மற்றும் காவல்துறையினர் அந்த பத்திரிகையாளரை பாதுகாத்துள்ளனர். அரசியிலில் பழுத்த அனுபவம் பெற்ற வைகோ, பத்திரிகையாளர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்வது இது முதல் முறையல்ல.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் முன்பு எப்போது நிகழ்ந்திராத பல நடந்து வருகிறது.

இதை பற்றி கேள்வி எழுப்ப வேண்டியது பத்திரிகையாளர்களின் கடமை. இதற்கு பதில் சொல்ல விருப்பம் இல்லை என்றால், பதில் சொல்லாமல் கடந்து செல்வது அவரவர் உரிமை.

ஆனால், கேள்வியே கேட்கக் கூடாது என்று பத்திரிகையாளர்களிடம் அநாகரிகமாகவும், அச்சுறுத்தும் வகையிலும் நடந்துகொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, அரசியல்வாதி வைகோ, இதுபோன்ற நடவடிக்கையில் இனி ஈடுபடக் கூடாது என்றும், சென்னை பத்திரிகையாளர் சங்கம் ((MUJ) அவரிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.



முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், குனியமுத்தூர் பகுதி, சுண்டக்கா முத்தூர், வார்டு எண்: 89ல் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி பெயர் பலகையை திறந்து வைத்து உறுப்பினர் சேர்த்தல் மற்றும் அணி உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கி, மரக்கன்றினை நட்டு வைத்தார். இதில் பகுதி கழக செயலாளர் லோகநாதன், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், மாவட்ட துணை செயலாளர் ஜெயந்தி சக்திவேல், வட்ட செயலாளர் சக்திவேல், பேரூர் கழக செயலாளர் அண்ணாதுரை, நரசிபுரம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் என்.ஆர்.கார்த்திகேயன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் சரவணன், மகேந்திரன், வெங்கடேஷ், முருகேசன், கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.